**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR**

S.C. Case No : 48/2020

Deposition of witness for Prosecution : Pw4

Defence :

Name : Aisha Sultthana
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 02.11.2021 in accordance with the provision with the Act of 1983.

முதல் விசாரணை :

நான் தற்பொழுது அரசு மருத்துவமனை ஓசூரில் பணி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 05.10.2019 அன்று காலை 9.15 மணிக்கு சண்முகம் ' என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார்.அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒருநபர்கத்தியால் காலை 8.30 மணிக்கு 5.10.19 அன்று அவரது வீட்டிற்கு அருகில் தாக்கியதில் காயம் ஏற்பட்டதாக சொன்னர்.அவரை பரிசோதித்ததில் அவரது தலையில் பின்புறம் 5 X. 0.5 X.0.5 செ.மீ அளவுள்ள கிழிந்த காயம் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.அவர் குணம் மருத்துவமனயில்சிகிசச்சைக்கு செல்வதாக மருத்துவமனையில் இருந்து சென்று விட்டார். அவருக்கு சிடி ஸ்கேன் எடுக்கப்ட்டது. அவருக்கு சி2 ப்ராக்சர்இருந்தது.அதனால் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று கருத்து வழங்கியுள்ளேன. அந்த காயச்சான்றிதழ் அரசு தரப்பு சான்றாவணம் 2. அதே தினம் அதே சம்பவத்தில் காயம் எற்படதாக சந்ரு என்ற மெய்யப்ன் காலை 9.10 மணிக்கு சிகிச்சைக்கு அழைத்து வரப்படடார்.அவர் தன்னை அடையாளம் தெரிந்த ஒரு நபர் கத்தியால் தாக்கியதில் தனது வீட்டிற்கு அருகில் தனக்கு காயம் ஏற்பட்டதாக சொன்னார்.அவரை பரிசோதித்ததில் அவருக்கு இடது கை பெருவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது.அவருக்கு முதலுதி சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தது.அதன்பிறகு அவர் குணம்

மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார்.அவருக்கு ஏற்படடகாயம் கொடுங்காயம் என்று கருத்து வழங்கியுள்ளேன்.அந்த் காய சான்றிதழ் அரசு தரப்பு சான்றாவணம் 3. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

போலிசார் என்னை விசாரித்த போது ஆயுதத்தை காண்பித்து அதனால் அரசு தரப்பு சான்றாவணம் 2 மற்றும் 3ல்சொல்லியுள்ள காயம் எற்பட வாய்ப்புள்ளதா என்று விசாரித்தார்களா என்றால்இல்லை. அ.சா.1 மற்றும் 2 க்கு ஏற்பட்டகாயம் கொடுங்காயம் என்று குணம் மருத்துவமனை மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் கருத்து வழங்கியள்ளேனா என்றால் இல்லை. சண்முகத்திற்கு சிடி ஸ்கேன்அடிப்படையில் தான் நான் கருத்து வழங்கினேன். அ.சா.2க்கு ஏற்பட்டது கொடு:ங்காயம் என்று அவரை பார்த்தவுடன் சொல்லிவிட்டேன். நான் பார்த்தவுடன் ஒரு நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவ விதிமறைகளின் படி கருத்துவழங்க முடியுமா என்றால்நான் பரிசோதித்து தான் கருத்துவழங்கினேன். எலும்புமுறிவை எக்ஸ்ரே எடுத்து தான் கண்டறிய முடியும் என்று சொன்னால்சரியல்ல. அது பார்வையிட்ட போதே தெரிந்ததால் கொடுங்காயம் என்று பார்த்தவுடனே சொன்னே்.அ.சா.2க்கு ஏற்பட்ட காயத்தின் நீள அளவுகளை காயச்சான்றிதழில்குறிப்பிடவில்லை. ஒரு நபர் வேகமாக ஒரு இடத்தில் விரலை வைக்கும் போது அ.சா.2க்கு ஏற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா.2க்கு வெளிப்பற காயங்களோ, வேறு காயம் இருந்ததாக நான் காயச்சான்றிதழில் எழுதவில்லை. அ.சா.2க்கு ரத்தம் வடிந்துகொண்டிருந்ததாக நான் எனதுகாயச்சான்றிதழில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். குணம் மருத்துவமனை மருத்துவர்களுக்கு தான் அ.சா.2க்கு ஏற்பட்டுள்ள விரல்காயம் பற்றிய விவரங்கள் தெரியும் ˙என்று சொன்னால்சரிதான். அ.சா.2க்கு வெளிப்புற காயங்கள் இல்லாததால் அது கத்தியால் ஏற்ப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் குணம் மருத்துவமனை மருத்துவ ஆவணங்களின் படி அ.சா.2க்கு வெட்டுக்காயம் உள்ளது. அவருக்கு நரம்ப மண்டலம் துண்டிக்கப்பட்டுள்ளது. நான் அவருக்கு வெளிப்பு காயங்கள் ஏறப்பட்டதை விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிடவில்லை. குணம் மருத்துவமனை ஆவணங்களை வைத்து தான் கொடுங்காயம் என்று கருத்துவழங்கியுள்ளேன். அ.சா.1க்கு வழங்கிய காயச்சான்றிதழ் குணம் மருத்துவமனை ஆவணங்களின் அடிப்படையில் தான் கருத்துவழங்கியுள்ளேன். அ.சா.1 மற்றும் 2க்கு நான் எக்ஸ்ரே,சிடி ஸ்கேன் ஆகியவற்றை எடுக்கவில்லை.அவர்கள் குணம் மருத்துவமனைக்கு செல்ல விருப்பம் தெரிவித்தார்கள். குணம் மருத்துவர்கள் என்னிடம் அ.சா.1 மற்றும் 2க்கு எடுக்கப்பட்ட சிடிஸ்கேன் மற்றும் எக்ஸ்ரேயை என்னிடம் கொடுக்கவில்லை. அ.சா.1க்கு ரத்தம் வடிந்து கொண்டிருந்ததாக நான் எனதுசான்றிதழில் குறிப்பிடவில்லை.கிழிந்த காயத்திற்கும் வெட்டு காயத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.இரண்டும் ஒன்று தான். கிழிந்த காயம் என்பது சிறியதாக இருக்கும் என்றும் வெட்டுக்காயம் சீரானதாக இருக்கும் என்றும் சரியல்ல. அ.சா.1 மற்றும் 2 க்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல. கொடுங்காயங்களாக இருந்திருந்தால் தேவையான ஆவணங்களை சரிபார்த்து கருத்து வழங்கியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. ஆர்தோ மருத்துவரின் அறிக்கையை வைத்து

நான்கருத்து வழங்கியுள்ளது தவறானது என்று சொன்னால் சரியல்ல.